EMBASSY OF JAPAN

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
Tel : +94-11-2693831~3, Fax : +94-11-2699074
E-mail : cultujpn@co.mofa.go.jp

PRESS RELEASE

December 05th 2013

**மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார் வடக்கு ஈச்சலவக்கை ஆரம்ப பாடசாலையின் கல்விச் சூழலை முன்னேற்றும் திட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் 104,835 US டொலர்களை நன்கொடையாக வழங்குகிறது**

ஜப்பானிய அரசாங்கம் மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார் வடக்கு ஈச்சலவக்கை ஆரம்ப பாடசாலையின் கல்விச் சூழலை மேம்படுத்தும் திட்டத்திற்கு 104,835 US டொலர்களை (அண்ணளவாக 12.5 மில்லியன் ரூபாவை) நன்கொடையாக கீழ்மட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத்திட்டத்தின் கீழ் வழங்குகிறது.

மன்னார் வடக்கு ஈச்சலவக்கை ஆரம்ப பாடசாலையின் கல்விச் சூழலை மேம்படுத்தும் திட்டமானது மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் ப்லேன் ஸ்ரீ லங்கா (Plan Sri Lanka) நிறுவனத்தால் அமுல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு பாடசாலைக்கட்டிடம், ஒரு நிர்வாகக்கட்டிடம், ஒரு அழகியல் கற்கைகளுக்கான கட்டிடம், கழிவறை வசதிகள், குடிநீர் வழங்கல் தொகுதி மற்றும் ஒரு சிறுவர் விளையாட்டு இடப்பகுதி என்பன அமைக்கப்படும். கற்பித்தல் செயன்முறைகளை முன்னேற்றுவதற்காக PLAN நிறுவனத்தால் ஆசிரியர்களுக்கு பயிற்சித் தொடரொன்று நடாத்தப்படுதுடன் பொருத்தமான சூழலின் கீழ் கல்விகற்றலுக்கான பிள்ளைகளின் உரிமைகளை உணர்த்துவதற்காக பெற்றோர்களுக்கும் பயிற்சித் திட்டங்கள் முனனெடுக்கப்படும்.

ஜப்பான் இத்தட்டத்திற்கான உதவியை இலங்கைக்கான உதவி வழங்கும் கொள்கையில் உள்ளடங்கும் "முன்னேற்றமடைந்து வரும் பிராந்தியங்களின் அபிவிருத்தி" என்ற நோக்கத்தின் கீழ் வழங்குகிறது. வறுமையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதார மற்றும் பொருளாதார வளர்ச்சியின் மீட்சியானது கீழ்க்கட்டமைப்பு வசதிகளின் புணரமைப்பு மூலம் மேலும் வலுவூட்டப்பட வேண்டும் என ஜப்பானிய அரசாங்கம் எதிர்ப்பார்க்கிறது. இவ்வகையான ஒருமைப்படுத்தப்பட்ட வழிமுறையானது நீண்ட காலத்தில் நல்லிணக்கத்துக்கும் நீடித்து நிலைத்த சமாதானத்துக்கும் நாட்டின் சகல பாகங்களின் அபிவிருத்திக்கும் வழியேற்படுத்தும்.

பிள்ளைகள் எலலோரும் தங்களது முழுமையான திறமைகளை உணரும் ஒரு உலகமே ப்லேன் நிறுவனத்தின் நோக்கமாகும் என ப்லேன் ஸ்ரீ லங்கா (Plan Sri Lanka) நிறுவனத்தின் வதிவிட நிறைவேற்றதிகாரி திரு. நெட் எஸ்பி கூறினார். யுத்தத்தால் பாதிக்கபட்ட மிகவும் பின்தங்கிய பிள்ளைகளுக்கு கல்வி திட்டங்களை வழங்கி வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தும் ப்லேன் நிறுவனத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாக ஜப்பானிய தூதுவரகம் மன்னார் வடக்கு ஈச்சலவக்கை ஆரம்ப பாடசாலையின் வசதிகளை அபிவிருத்தி செய்ய அதனது உதவியை நல்கியிருக்கிறது.

இந்நன்கொடை தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் திரு. நொபுஹிதொ ஹொபொ மற்றும் ப்லேன் ஸ்ரீ லங்கா (Plan Sri Lanka) நிறுவனத்தின் வதிவிட நிறைவேற்றதிகாரி திரு. நெட் எஸ்பி ஆகியோருக்கிடையே கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் டிசம்பர் 5 2013 அன்று கைச்சாத்திடப்பட்டது.


For further information, please contact;
Economic Cooperation Section of the Embassy of Japan
Tel. 011-2693831 ext 225
Email : cultujpn@co.mofa.go.jp